Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure.)
IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, THIRUKALUKUNDRAM.

Case No. CC.130/2016

**P.W**.1 (LW1)

| | |
|---|---|
| Name | : **திருமதி.சுமதி** |
| Father/Husband Name | : திரு, |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

எதிரி ஆஜரில் இல்லை. மனு தாக்கல் செய்து ஏற்பட்டது. எதிரியின் வழக்கறிஞர் ஆஜரில் உள்ளார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 29.01.2026

முதல் விசாரணை – சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். நான் தற்போது மாவட்ட குற்ற பிரிவு காஞ்சிபுரம் மாவட்டத்தில் காவல் நிலையத்தில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 05.05.2016 ம் தேதி மாமல்லபுரம் மதுவிலக்கு அமல் பிரிவில் தலைமை காவலராக பணியில் இருந்த போது, ஆய்வாளர் உத்தரவின் பேரில் ஆய்வாளருடன், நானும், தலைமை காவலர் 161 சுரேஷ் ஆகியோர் சகிதம் மதுவிலக்கு ரோந்து அலுவலாக சென்றபோது கிடைக்கப்பட்ட ரகசிய தகவலின் பேரில் நாவாக்கால் கூவத்தூர் பேட்டை பனஞ்சாலையில் ஒரு வீட்டிற்கு அருகில் சந்தேகப்படும் படி ஒரு பெண் நபர் நின்றுக் கொண்டிருந்தார். எங்களை பார்த்து ஓட முற்பட்டவரை பிடித்து விசாரணை செய்தபோது முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னார்.

அவரின் பெயர் செல்வி க/பெ.ஆறுமுகம் என்று சொன்னார். அவர் நின்றுக் கொண்டிருந்த இடத்தில் இரண்டு கோணி பைகளில் ஒரு கோணிப் பையில் 100 எம்.எல் அளவு கொண்ட 550 பாக்கெட் வீதம் இரண்டு கோணி பைகளில் மொத்தம் 1100 பாக்கெட்டுக்கள் மொத்தம் 110 லிட்டர் திரவம் இருந்தது. அதில் ஒரு பாக்கட்டை பிரிந்து நுகர்ந்து பார்த்தபோது அதில் விஷ நெடியுடன் கூடிய வாய் குமட்டலும், நெஞ்செறிச்சலும் ஏற்படும் வகையில் திரவம் இருந்தது. எனவே அது விஷ நெடியுடன் கூடிய எரிசாராயம் என்பதால் எதிரியை காலை 7.30 மணியளவில் எதிரி செல்வியை கைது செய்து எதிரியிடமிருந்த வழக்கு சொத்தினை கைப்பற்றி பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும், தலைமை காவலர் 161 சுரேஷ் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். **(கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களிலிருந்து சுமார் 500 எம்.எல் அளவு கொண்ட ஒரு கோணி பையில் இருந்து இரண்டு பாட்டில்கள் வீதம் மொத்தம் 4 பிளாஸ்டிக் பாட்டில்களில் எரிசாராயத்தை எடுத்து சீல் வைத்து லேபிள் ஒட்டி மீதம் இருந்த எரிசாராயத்தை சம்பவ இடத்திலேயே கொட்டி அழிக்கப்பட்டது. பின்னர் வழக்கு சொத்துக்களுடன் காவல் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 229/2016 சட்டப்பிரிவுகள் 4(1)(aaa), 4(1-A) TNP Act r/w 6 & 11 of RS Rules-ன் படி காவல் ஆய்வாளர் வழக்கு பதிவு செய்தார். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

மதுவிலக்கு ரோந்து பணிக்காக அரசு வாகனத்தில் சென்றோம். நான் பாக்கட் டைரி பராமரிப்பது வழக்கம். அதை காவல் ஆய்வாளர்

விசாரணையில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை நுகர்ந்து பார்த்தபோது ஏற்பட்ட கண் எரிச்சலுக்கும், வாய் குமட்டலுக்கும் மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கவில்லை. சம்பவ இடத்தில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றியபோது புகைப்படம் எதுவும் எடுக்கவில்லை. நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், மேல் அதிகாரிகளின் அழுத்தத்தின் காரணமாக வழக்கிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், அவரிடமிருந்து எந்த வழக்கு சொத்தையும் கைப்பற்றப்படவில்லை என்றாலும், அவரிடமிருந்து எந்த வாக்குமூலமும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல் ஆய்வாளர் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டு மகஜரில் நான் காவல் நிலையத்தில் வைத்து தான் கையொப்பம் செய்தேன் என்றாலும் சரியல்ல.

Taken down by me in open Court read over in the witness in the present of the accused and admitted by the witness to be correct.

(Sd)S.Vineeth
J.M./TKM.